RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING | மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 174 | ஜூன்.29 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## 'இரண்டு ஹெல்மெட்டுகள் கட்டாயம்' மோட்டார் வாகன விதிகளை திருத்த மத்திய அரசு முடிவு



புதுடெல்லி: ஜூன்.29-

புதிய இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு, வாகன உற்பத்தியாளர்கள் இரண்டு ஹெல்மெட்டுகளை வழங்குவதை கட்டாயமாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதுபோல ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டத்தை கட்டாயமாக்கவும் முடிவு செய்துள்ளது.

இந்த புதிய விதியை நடைமுறைப்படுத்த மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் முக்கிய மாற்றங்களை செய்ய மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

கடந்த ஜூன் 23 அன்று மத்திய அரசு வெளியிட்ட வரைவு அறிவிப்பின்படி, 'புதிய விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர், இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு இருசக்கர வாகன உற்பத்தியாளர் இந்திய தரநிலைகள் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட தரத்துடன் 2 தலைக்கவசங்களை வழங்க வேண்டும். வழங்கப்படும் தலைக்கவசங்கள் இந்திய தரநிலைகள் ஆணையம் (BIS) நிர்ணயித்த தரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். இருப்பினும், மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 129 இன் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நபர்களுக்கு இந்தத் தேவை பொருந்தாது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனவரி 1, 2026 முதல், 50சிசி க்கு மேல் எஞ்சின் திறன் அல்லது மணிக்கு 50 கிமீ வேகத்திற்கு மேல் உள்ள மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் உள்ளிட்ட அனைத்து புதிய எல்2 வகை இரு சக்கர வாகனங்களிலும் ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் (ABS) பொருத்தப்படுவதை கட்டாயமாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் இந்திய தரநிலை IS14664:2010 உடன் இருக்க வேண்டும். இந்த ஏபிஎஸ் பாதுகாப்பு அமைப்பானது வாகனத்தின் திடீர் பிரேக்கிங்கின் போது சறுக்குவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது.

மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் முன்மொழியப்பட்ட இந்த புதிய விதிகள் குறித்து பொதுமக்கள் தங்கள் பரிந்துரைகள் மற்றும் ஆட்சேபனைகளை அனுப்ப 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைகளை comments-morth@gov.in என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் சார்பில் பயனாளிக்கு ரூ.5/இலட்சம் பணியிடத்து விபத்து மரண உதவித்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் வழங்கினார்.

## மாலை தந்தி செய்தி எதிரொலி





■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி புதூரிலிருந்து சூராணம் செல்லும் சாத்தனியில் கிராமத்தில் கூட்டுறவு வங்கி எதிரில் காவிரி கூட்டு குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் சாலையில் நீர் வீணாக சென்றது இதுகுறித்து மாலை தந்தி நாளிதழின் செய்தி எதிரொலியாக தற்போது குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்யப்பட்டது.விரைவு நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் மற்றும் மாலை தந்தி நாளிதழிலுக்கு கிராம பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்

## 'ஓரணியில் தமிழ்நாடு' எனும் உறுப்பினர் சேர்ப்புத் திட்டம் ஜூலை 1ல் தொடங்குகிறார் ஸ்டாலின்



சென்னை: ஜூன்.29-

"தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் புறக்கணித்து, தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணைபோகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுக்கப்படுகிறது" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: மக்களுக்கான திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும் 2026 ம் ஆண்டிலும் வெற்றிகரமாகத் தொடர்ந்திட ஜூலை 1 முதல் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்துடனான மாபெரும் பரப்புரைப் பயணத்தை நான் தொடங்கி வைக்கிறேன்.

தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் புறக்கணித்து, தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணைபோகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கான செயலியை அறிமுகம் செய்து, 234 தொகுதிகளிலும் அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் கட்சியின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில், கட்சியின் தொழில்நுட்ப அணிச் செயலாளர், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஜூன் 25 அன்று அண்ணா அறிவாலயத்தில் சிறப்பான முறையில் பயிலரங்கை நடத்தியிருக்கிறார்.

இதில் பயிற்சி பெற்றுள்ள தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள், 234 தொகுதிகளிலும் உள்ள 68 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்டுள்ள கட்சியின் இளம் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்து, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் வழிகாட்டுதலுடன் அவரவர் வாக்குச்சாவடிக்குப்பட்ட வீடு வீடாகச் சென்று, மக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் அரசின் திட்டங்களால் அந்தக் குடும்பம் பெற்றுள்ள பயன்களை உறுதி செய்து, ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைக்கும் பணியை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

மாநிலக் கட்சியான திமுக இந்தியாவில் வேறெந்த இயக்கமும் செய்யாத அளவில் 68 ஆயிரத்துக்கும் அதிகமான டிஜிட்டல் வீரர்கள் கொண்ட கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. கட்சியின் தொண்டர்கள் தமிழ்நாட்டு மக்களைக் கொண்டு ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைப்பார்கள். இந்த செயல்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கிட இன்று ஜூன் 28 மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் ஆகியோருடனான காணொலிக் கூட்டம் நடைபெறுகிறது.

ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைப்பதில் திமுகவினர் ஒவ்வொருவரும் தங்களை இணைத்துக் கொண்டு, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும், திமுக அரசின் சாதனைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதிலும், 2026ல் மீண்டும் திமுக ஆட்சியை அமைப்பதிலும் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

தொண்டர்களையும் பொதுமக்களையும் அரவணைக்கும் திமுகவின் பாதை தெளிவானது. பயணம் உறுதிமிக்கது. இடையூறுகள், அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## நிலத்தடி நீருக்கு வரி விதிக்கும் முடிவை மத்திய அரசு கைவிட டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை: ஜூன்.29-

"நிலத்தடி நீர் வீணடிக்கப்படுவதையும், தவறாக பயன்படுத்துவதையும் தடுக்கவே வரி விதிக்கப்படுவதாக மத்திய நீர்வளத்துறை கூறியிருக்கும் விளக்கம் ஏற்புடையதல்ல. எனவே, நிலத்தடி நீருக்கான வரி விதிக்கும் முடிவை கைவிட வேண்டும்," என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "நாடு முழுவதும் விவசாயத்துக்காக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீரின் அளவுக்கு ஏற்ப வரி விதிக்கும் முறையை செயல்படுத்த இருப்பதாக வெளியாகியிருக்கும் மத்திய நீர்வளத்துறையின் அறிவிப்புக்கு தமிழகத்தின் ஒட்டுமொத்த விவசாயிகளும் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

திமுக அரசின் கூட்டணி தர்மத்தால் அண்டை மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய நீர் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாத நிலையில், மாநிலத்தின் பெரும்பங்கு வேளாண்மைக்கு முதன்மை நீராக பயன்படுத்தப்படும் நிலத்தடி நீருக்கும் வரி விதிக்கும் மத்திய நீர்வளத்துறையின் முடிவு தமிழக விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நிலத்தடி நீரின் அருமையையும், அவசியத்தையும் மாநிலத்தின் ஒவ்வொரு விவசாயியும் நன்றாக அறிந்து தேவைக்கேற்ப பயன்படுத்தி வரும் நிலையில், நிலத்தடி நீர் வீணடிக்கப்படுவதையும், தவறாக பயன்படுத்துவதையும் தடுக்கவே வரி விதிக்கப்படுவதாக மத்திய நீர்வளத்துறை கூறியிருக்கும் விளக்கம் ஏற்புடையதல்ல.

ஏற்கெனவே, விளைச்சல் பாதிப்பு, உரிய விலையின்மை என அடுத்தடுத்து இன்னல்களை சமாளிக்க முடியாமல் தமிழக விவசாயிகள் தவித்து வரும் நிலையில், தற்போது நிலத்தடி நீருக்கும் வரி என்பது அவர்களை விவசாயத்தை விட்டே வெளியேற்றக் கூடிய ஆபத்தை உருவாக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

எனவே, எத்தகைய இடையூறுகள் வந்தாலும் உணவு உற்பத்தி எனும் மகத்தான பணியை மேற்கொண்டிருக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலத்தடி நீருக்கான வரி விதிக்கும் முடிவை கைவிட வேண்டும் என மத்திய நீர்வளத்துறையை வலியுறுத்துகிறேன்," என்று அவர் கூறியுள்ளார்.

பாஜக மறுப்பு: இதனிடையே, "விவசாயிகள் பாசனத்திற்காக பயன்படுத்தும் நிலத்தடி நீருக்கு வரி விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்ற செய்தி பல்வேறு தமிழ் ஊடகங்களில் வெளிவந்துள்ளது. இதற்கு பலரும் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர். உண்மையில், இது போன்ற எந்த ஒரு முடிவோ அல்லது கருத்தோ மத்திய அரசால் குறிப்பிடப்படவில்லை என்பதும், விவசாயம் மற்றும் தண்ணீர் ஆகிய இரு விவகாரங்களுமே மாநில அரசின் கீழ் உள்ளவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இல்லாத ஒன்றை இருப்பது போல், மத்திய அரசின் மீது வெறுப்பை ஏற்படுத்த வேண்டுமென்றே திட்டமிட்ட ரீதியில் இந்த வதந்தியை 'ஒரு சில ஊடகங்கள்' பரபரப்பியதோடு, பாஜக அரசின் மீதான தங்களின் வெறுப்பை உமிழ்ந்துள்ளன. இது ஊடக 'அறம்' அல்ல, ஊடக 'புறம்'" என பாஜக மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி தெரிவித்துள்ளார்.

## 'இஸ்ரேலுக்கு 'அப்பா'விடம் ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை'' ஈரான் காட்டம்

டெஹ்ரான்: ஜூன்.29-

ஈரான் உச்ச தலைவரை அசிங்கமான படுகொலையிலிருந்து காப்பாற்றியதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி கடுமையாக விமர்சித்துள்ளார்

இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஒரு ஒப்பந்தத்தை விரும்புவதில் உண்மையாக இருந்தால், ஈரானின் உச்ச தலைவரான அயதுல்லா கொமேனியை அவமதிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அவரது மில்லியன் கணக்கான இதயப்பூர்வமான ஆதரவாளர்களை காயப்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

நமது ஏவுகணைகளால் தகர்க்கப்படுவதைத் தவிர்க்க, இஸ்ரேலுக்கு 'அப்பாவிடம்' ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உலகுக்குக் காட்டிய மகத்தான சக்திவாய்ந்த ஈரான் மக்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் அவமானங்களை தயவுசெய்து கவனத்தில் கொள்ளாதீர்கள்' என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, ட்ரம்ப் தனது சமூக வலைதளத்தில், ஈரான் உச்ச தலைவர் கொமேனியை நன்றியுணர்வு இல்லாதவர் என்று குற்றம் சாட்டி, அவரை படுகொலையிலிருந்து காப்பாற்றியதாக தெரிவித்திருந்தார். இதற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக ஈரான் வெளியுறவு அமைச்சர் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் தனது பதிவுகளில்,"ஈரான் உச்ச தலைவர் எங்கு பதுங்கியிருந்தார் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் உலகின் மிகவும் சக்திவாய்ந்த இஸ்ரேல், அமெரிக்க ஆயுதப் படைகள் அவரை கொல்ல நான் அனுமதிக்கவில்லை. நான் அவரை மிகவும் அசிங்கமான மற்றும் அவமானகரமான மரணத்திலிருந்து காப்பாற்றினேன். அவர் அதற்கு 'நன்றி, அதிபர் டிரம்ப்!' என்று சொல்ல வேண்டியதில்லை" என்று தெரிவித்திருந்தார்.



■ மதுரை கோவில்பாப்பாகுடி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் இருந்து மேற்கு ஊராட்சிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குப்பைகளை ஏற்றி அகற்றும் வாகனத்தை பயன்பாட்டுக்கு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் இன்று (286 2025)கொடியசைத்து தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.



# தமிழ்நாடு அரசின் மூலம் அனைத்து துறைகளின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த புகைப்படக்கண்காட்சி

கன்னியாகுமரி, ஜூன்.29-

கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குடப்பட்ட வெள்ளிசந்தை பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஏழை எளிய கிராமப்புற மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்களை அறிவித்து அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை அளிக்கும் திட்டம், மக்களை தேடி மருத்துவம், சாலை, பேருந்து, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டங்கள், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், நகர்ப்புற வேலைவாய்ப்புத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது, முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் குறித்தும், தொழிலாளர்களை தேடி மருத்துவம், முதலமைச்சரின் மகளிர் விடியல் பயணத்திட்டம் ஊரக பகுதிகளில் மக்களுடன் முதல்வர், உங்களைத்தேடி உங்கள் ஊரில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பணியின்போது காலமானவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கியது ஆகியவை குறித்தும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்தது, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கியது, உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட் சியினை பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு பயன்பெற்றார்கள்.

# ‘இரண்டு ஹெல்மெட்டுகள் கட்டாயம்‘ மோட்டார் வாகன விதிகளை திருத்த மத்திய அரசு முடிவு

புதுடெல்லி, ஜூன்.29-

புதிய இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு, வாகன உற்பத்தியாளர்கள் இரண்டு ஹெல்மெட்டுகளை வழங்குவதை கட்டாயமாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதுபோல ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டத்தை கட்டாயமாக்கவும் முடிவு செய்துள்ளது.



இந்த புதிய விதியை நடைமுறைப்படுத்த மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் முக்கிய மாற்றங்களை செய்ய மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

கடந்த ஜூன் 23 அன்று மத்திய அரசு வெளியிட்ட வரைவு அறிவிப்பின்படி, ‘புதிய விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர், இருசக்கர வாகனம் வாங்குவோருக்கு இருசக்கர வாகன உற்பத் தியாளர் இந்திய தரநிலைகள் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட தரத்துடன் 2 தலைக்க வசங்களை வழங்க வேண்டும்.

வழங்கப்படும் தலைக்கவசங்கள் இந்திய தரநிலைகள் ஆணையம் (BIS) நிர்ணயித்த தரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். இருப்பினும், மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 129 இன் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நபர்களுக்கு இந்தத் தேவை பொருந்தாது’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜனவரி 1, 2026 முதல், 50சிசி க்கு மேல் எஞ்சின் திறன் அல்லது மணிக்கு 50 கிமீ வேகத்திற்கு மேல் உள்ள மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் உள்ளிட்ட அனைத்து புதிய எல்2 வகை இரு சக்கர வாகனங்களிலும் ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் (ABS) பொருத்தப் படுவதை கட்டாயமாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

ஆன்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம் இந்திய தரநிலை மிஷி14664:2010 உடன் இருக்க வேண்டும். இந்த ஏபிஎஸ் பாதுகாப்பு அமைப்பானது வாகனத்தின் திடீர் பிரேக்கிங்கின் போது சறுக்குவதற்கான வாய்ப்புகளைக் குறைக்கிறது.

மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989ன் கீழ் முன்மொழியப்பட்ட இந்த புதிய விதிகள் குறித்து பொதுமக்கள் தங்கள் பரிந்துரைகள் மற்றும் ஆட்சேபனைகளை அனுப்ப 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைகளை comments-morth@gov.in என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 2025-26 ஆம் நிதியாண்டில் ரூ.19,551 கோடி வங்கிக் கடன் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தகவல்

புதுக்கோட்டை, ஜூன்.29-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் ஆலோசனை குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.எம். அப்துல்லா முன்னிலையில் 27.06.2025 அன்று நடைபெற்றது.

பின்னர், 202526 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டு சிரேஷ்ட கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் எண்ணற்ற கடன் சார்ந்த திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், விவசாயம், கல்வி, தொழில் உள்ளிட்ட பல்வேறு முக்கியத் துறைகளுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் 2025-2026 ஆம் ஆண்டிற்கான வங்கிகளின் கடன் திறன் ரூ.19,551 கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், 202526 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டு சிரேஷ்ட கடன் திட்ட (Annual Credit Plan – ACP) அறிக்கை 27.06.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து துறைகளுக்கும் கடன் வழங்குவதை மேம்படுத்திடும் வகையில் ஒரு முழுமையான நடவடிக்கையை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் மொத்த கடன் ஒதுக்கீடு ரூ.19,551 கோடி ஆகும். இதில் ரூ.15,795 கோடிகள் அத்தியா வசிய துறைகளுக்காகவும் (Priority Sector) மற்றும் ரூ.3,756 கோடி அத்தியாவசியமில்லா துறைகளுக்காகவும் ; (Non-Priority Sector) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, அத்தியாவசிய துறைகளுக்கான விவசாயம் மற்றும் இணை செயல்பாடுகள் துறைகளுக்கு ரூ.14,265 கோடியும், தொழிற்துறைக்கு ரூ.1369.6 கோடியும், வீட்டு வசதித்துறைக்கு ரூ.44 கோடியும், கல்வித் துறைக்கு ரூ.25.2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டமானது முக்கிய வளர்ச்சி துறைகளுக்கு கடன் செல்வதை ஊக்குவித்து, பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவித்துடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கிராமப்புற மற்றும் நகரப்புற பகுதிகளில் இத்திட்டம் முக்கிய பங்கு வகிக்கவுள்ளது. மேலும், இத்திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்திட வங்கிகள், தொடர்புடைய அரசுத் துறைகள் மற்றும் வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியவை இடையே ஒருங்கிணைந்த செயல்பாடு மிகவும் அத்தியாவசிய ஒன்றாகும். எனவே, கிராமப்புறங்கள் மற்றும் பின்தங்கிய பொதுமக்களுக்கு தேவையான கடன்சேவைகளை உரிய முறையில் வழங்கிடும் வகையில் தொடர்புடைய அரசு அலுவலர்கள் இத்திட்டத்தினை சிறப்பு கவனம் செலுத்தி பணியாற்றிட வேண்டும்.

மேலும், தற்போது வங்கிகளில் நிலுவையில் உள்ள கடன் விண்ணப்பங்களை விரைவாக வழங்கிடவும், விவசாயம், கால்நடை மற்றும் மீன்வளம் சார்ந்த கடன்களுக்கு முன்னுரிமை அளிக்கு மாறும், வாழ்வாதார கடன்கள், சுய உதவிக் குழு கடன்கள் மற்றும் கல்வி கடன்கள் ஆகியவற்றை வங்கிகள் சிறப்பாக வழங்கிடவும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கான முன்னுரிமை கடன் இலக்கீட்டினை எய்திட வேண்டுமென்றும் வங்கி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், காரைக்குடி மண்டல இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு.எம்.டி. ஷாரேயர், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.த.நந்தகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.கே.ஸ்ருதி, மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) திரு.தீபக்குமார், மாவட்ட மேலாளர் (தாட்கோ) திருமதி. எல்.அனிட் விமலின், வங்கி மேலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஜூன்.29-

சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கு முன்னாள் படைவீரர் நல அலுவலகம் வாயிலாக Sparsh outreach programme வருகின்ற 02.07.2025 மற்றும் 03.07.2025 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் திரு.ஸி.நாராயண பிரசாத், IDAS, CDA Chennai அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை CDA chennai அதிகாரிகள் மற்றும் பணியாளர்களால் Sparsh outreach programme நடத்தப்பட உள்ளது. எனவே, Sparsh மூலமாக ஓய்வுதியம் மற்றும் குடும்ப ஓய்வுதியம் பெறும் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்வதற்க்கு தேவையான உரிய ஆவணங்களுடன் Sparsh outreach programme கூட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

### சூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக கொண்டாடும் வகையில்

## பள்ளி மாணவ, மாணவியர்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெற உள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, ஜூன்.29-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18ஆம் நாளினையே “தமிழ்நாடு நாளாக” இனி கொண்டாடப்படும் என்பதை தெரிவிக்கும் வகையில் “தனித்துவ தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்ட 18.07.1967ஆம் நாளினை பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் சூலை 18ஆம் நாள் தமிழ்நாடு நாள் என்ற பெயரில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும்” என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இவ்வறிவிப்பிற்கிணங்க, தேனி மாவட்டத்தில் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 04.07.2025 அன்று காலை 09.30 மணி முதல் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெறவுள்ளன.

பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கட்டுரைப்போட்டி “ 1) ஆட்சிமொழி வரலாற்றில் கீ.இராமலிங்கம் 2) பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரின் தமிழ் ஆட்சிச்சொல் பணி” எனும் தலைப்பிலும், பேச்சுப்போட்டி “ 1) கடமை, கண்ணியம், கட்டுப்பாடு 2) அன்னைத் தமிழே ஆட்சிமொழி 3) தொன்றுதொட்டு தமிழ்நாடு எனும் பெயர் 4) அறிஞர் அண்ணா கண்ட தமிழ்நாடு 5) ஆட்சிமொழி விளக்கம் 6) தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய நிகழ்வு 7) ஆட்சிமொழி சங்க காலம் தொட்டு 8) இக்காலத்தில் ஆட்சிமொழி ” எனும் தலைப்புகளில் மட்டுமே போட்டிகள் நடத்தப்படும்.

கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பள்ளி மாணவர்கள், அவர்கள் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியரிடம் உரிய படிவத்தில் பரிந்துரை பெற்று மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரால் முதற்கட்டமாக கீழ்நிலை போட்டிகள் நடத்தப்பட்டு அதனடிப்படையில் பரிந்துரைக்கப் பெறும் மாணவர்கள் மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளலாம். இப்போட்டிகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் பெறுவதற்கு 04546 251030 / 9159668240 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டியில் பங்கு பெற்று வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசாக ரூ.10,000/, இரண்டாம் பரிசாக ரூ.7,000/, மூன்றாம் பரிசாக ரூ.5,000/, காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.



### தோவாளை பகுதியில் அமைக்கபட்டு வரும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மணிமண்டப கட்டுமான பணிகளை

## விரைந்து முடித்திட பொதுப்பணித்துறை செயற்பொறியாளருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா அறிவுறுத்த

கன்னியாகுமரி, ஜூன்.29-

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியம் தோவாளை ஊராட்சிக்குட்பட்ட பிரதான சாலை அருகில் புதிதாக கட்டப்பட்டு வரும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் மணிமண்டபத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்துக்குட்பட்ட தேரூரில் திரு.சிவதாணுப்பிள்ளை - திருமதி.ஆதிலெட்சுமி இணையருக்கு 1876 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் நாள் மகனாக பிறந்தார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அவர்கள் சிறந்த தமிழறிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் குழந்தை பாடல்கள் எழுதியவர். அன்னாருடைய இலக்கிய பணிகளை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் தோவாளையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு முழுதிருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபமும், மாணவ மாணவியர்கள், போட்டித்தேர்வுகளில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் மற்றும் பொதமக்கள் பயன்பெறும் வகையில் அறிவுசார்ந்த நூலகத்துடன் கூடிய மண்டபம் அமைக்க ரூ.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டு, வேகமாக நடைபெற்று வந்தது

இந்நிலையில் கட்டுமான பணியை மேற்கொள்ளப்படுவதில் தாமதம் ஏற்படுவதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதன் அடிப்படையில், மணிமண்டப பணிகளை உடனடியாக மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தியதன் அடிப்படையில் பணிகளை விரைந்து முடித்திட செயற்பொறியாளர் (கட்டிடம்) அவர்களுக்கு அறிவுறுத்தியதோடு, கூடுதல் நிதியினை ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு அரசுக்கு திட்ட வரைவு அனுப்பியதன் அடிப்படையில் தற்போது மணிமண்டப பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

மேலும் மணிமண்டபத்தினை அழகுப்படுத்துவம் விதமாக முகப்பில் நுழைவு வாயில் அமைக்கவும், சுற்றுச்சுவர் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. அப்பணிகளும் விரைவில் மேற்கொள் ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இப்பணிகள் அனைத்தும் வெகு விரைவாக முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் செயற்பொறியாளர் திரு.ஜோசப் ரென்ஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா. ஜாண் ஜெகத் பிரைட், தோவாளை வட்டாட்சியர் திரு.கோலப்பன், தோவாளை முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் திரு.நெடுஞ்செழியன், துணைத்தலைவர் திரு.தாணு, ஒப்பந்ததாரர் திரு.ஜாண்சன், உதவி பொறியாளர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ மதுரை மாவட்டம் மேற்கு ஊராட்சி ஒன்றியம் கோவில்பாப்பாகுடி ஊராட்சியில் 64 இடங்களில் 7 கோடி மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைக்கும் பணிக்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி குத்துவிளக்கேற்றி வைத்து பணிகளை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் உடன் உள்ளார்.



# காவிரி நீர் போதிய அளவு வராததால் கருகும் நிலையில் இளம் நெற்பயிர்கள்

கீழ்வேளூர், ஜூன்.29-

கீழ்வேளூர் பகுதிக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் குறுவை நெற்பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் கூடுதலாக தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.காவிரி டெல்டா பாசனத்திற்கு இந்த ஆண்டு மேட்டூர் அணையை ஜூன் 12ம் தேதியும், கல்லணையை ஜூன் 15ம் தேதியும் முதலமைச்சர் மு.க.ஸ் டாலின் திறந்து வைத்தார்.

இதையடுத்து கடைமடை பகுதிக்கு கடந்த 5 நாட்களுக்கு முன் பாசனத்திற்காக தண்ணீர் வந்து சேர்ந்தது. இந்நிலையில் கீழ்வேளூர் பகுதிக்கு பாசனம் வழங்கும் ஓடம்போ க்கியாறு, கடுவையாறு போன்றவற்றில் தண்ணீர் குறைந்த அளவே வருகிறது. இதனால் வாய்க்கால்களில் வரும் தண்ணீர் வயலில் பாயும் அளவிற்கு வராமல் குறைந்த அளவே தண்ணீர் வருகிறது.

தற்போது நாகப்பட்டினம் மாவட்டத்தில் குறுவை சாகுபடி இலக்கை தாண்டி கூடுதலாக 100 சதவீதம் குறுவை சாகுபடிக்கு நேரடி நெல் விதைப்பு மூலம் 110 நாள் வயதுடைய நெல ரகங்களான ஆடுதுறை53, ஆடுதுறை57, ஏ.எஸ்.டி.16, டி.ஆர்.எஸ்.(திருப்பதி)5, கோ55, ஏ.டி.டி.45 போன்ற நெல் ரகங்களை விவசாயிகள் நேரடி நெல்விதைப்பு மூலம் குறுவை சாகுபடி செய்துள்ளனர். இந்நிலையில் கீழ்வேளூர் பகுதியில் 12 நாட்களுக்கு முன் பெய்த மழையில் சுமார் 40 சதவீத வயல்களில் விதை நெல் முளைத்து 10 நாள் பயிராக உள்ளது.

இந்த வயல்களில் கோடை உழவு செய்யப்பட்ட புழுதியில் நேரடி நெல் விதைப்பு மூலம் விதைக்கப்பட்டு முளைத்த நெற்பயிர் வயலில் ஈரப்பதம் இல்லாததால் வாடி வருகிறது. இன்னும் சில நாட்களில் மழை பெய்தோ அல்லது தண்ணீர் பாய்ச்சினாலோ தான் இந்த இளம் நெற்பயிரை காப்பாற்ற முடியும்.

இல்லையென்றால் முளைத்த இளம் நெற்பயிர்கள் கருகும் அபாயத்தில் உள்ளது. மேலும் நேரடி நெல் விதைப்பு மூலம் சுமார் 60 சதவீத விவசாயிகள் குறுவை நெல் விதைத்து தண்ணீர் இல்லாமல் முளைக்காமல் வயலிலேயே புழுதியில் 10 நாட்களுக்கு மேலாக விதைகள் உள்ளது.

குறுவை சாகுபடிக்கு முன்கூட்டிய காலத்தில் நெல் முளைத்தால் பருவ மழைக்கு முன் அறுவடை செய்து தாளடி சாகுபடி செய்யலாம். இந்நிலையில் மழை இல்லாததாலும், மேட்டூர் அணை தண்ணீரும் கீழ்வேளூர் பகுதியில் போதிய அளவு கிடைக்காததாலும் முளைத்த நெற்பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். எனவே, பொதுப்பணித்துணை அதிகாரிகள் கீழ்வேளூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளுக்கு பாசன நீரை அதிக அளவில் திறந்து விட்டு முளைத்துள்ள இளம் நெற்பயிர்களை காப்பாற்றவும், வயலில் நேரடி நெல் விதைப்பு தெளித்துள்ள நெல் விதைகள் முளைக்கவும் கூடுதலாக தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.



# முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா வழங்கினார்

கன்னியாகுமரி, ஜூன்.29-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் அரங்கில் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற முன்னாள் படைவீரர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.அ.ப., அவர்கள் சான்றிதழ் வழங்கி தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களை சார்ந்தோர்களுக்கு நலன்கருதி முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம் அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க, ஒரு கோடி ரூபாய் வரை வங்கிகள் வாயிலாக கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தின் வாயிலாக தொடங்கப்படும் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 விழுக்காடு மூலத்தன மானியமும், 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப்படும் எனவும், இவர்களுக்கு திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி போன்ற தேவையான பயிற்சிகளும் அரசால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து வங்கிகள் வாயிலாக தற்காலிக அனுமதி பெறப்பட்ட 25 நபர்களுக்கு கடந்த மே மாதம் நுனுஜஜ பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களில் பலருக்கு வங்கிக் கடனுக்கான இறுதி அனுமதி பெறப்பட்ட நிலையில் இரண்டாம் கட்டமாக 26 நபர்களுக்கு 17.06.2025 முதல் 23.06.2025 வரை வகுப்பறை பயிற்சியானது சுங்கான்கடையில் உள்ள ஸ்ரீஅய்யப்பா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக 24.06.2025 முதல் 26.06.2025 ஆகிய மூன்று தினங்கள் இணையதள பயிற்சியும் நடைபெற்றது. இப்பயிற்சியில் தேர்ச்சி அடைந்தோர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் தொழிலதிபர்களாக சிறந்து விளங்க வாழ்த்து தெரிவித்ததோடு இத்தொழில் மூலமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் அதிகமானோர் பயன்பெற செய்ய வேண்டும் எனவும் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தில்; அதிகமான எண்ணிக்கையில் முன்னாள் படைவீரர்களை; இணைக்கும் முயற்சியில் மாவட்ட முன்னாள் படைவீரர் நலத்துறையுடன் இணைந்து செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் நலன் துணை இயக்குநர் மேஜர் ஜெயகுமார், முன்னாள் படைவீரர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# முப்படை ஓய்வூதியதாரர் குறைதீர்க்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தகவல்



புதுக்கோட்டை, ஜூன்.29-

முப்படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் சார்ந்த குறைகளுக்கு தீர்வு காண ஸ்பர்ஷ் மொபைல் வேன் அவுட்ரீச் நிகழ்ச்சி எதிர்வரும் 01.07.2025 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஓய்வூதிய ஆவணங்களில் பெயர் மற்றும் இதர தகவல்களில் திருத்தம் மேற்கொள்ளுதல், ஆதார், பான் இணைத்தல்; உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற உள்ளது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த முப்படையில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க விரும்பும் முன்னாள் படைவீரர்கள் பணிச்சான்று, அடையாள அட்டை, ஓய்வூதிய ஒப்பளிப்பு ஆணை, ஆதார் கார்டு, பான் கார்டு மற்றும் வங்கிக்கணக்கு புத்தகம் ஆகியவற்றின் அசல் ஆவணங்களை கொண்டுவர வேண்டும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதிய உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோருதல்

கன்னியாகுமரி, ஜூன்.29-

விளையாட்டுத் துறையில் சர்வதேச / தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றிகளைப் பெற்று தற்போது நலிந்த நிலையிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.6000/ வீதம் வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வரவேற்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பத்தினை கன்னியாகுமரி மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான குறைந்தபட்ச தகுதி சர்வதேச / தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றிருத்தல், சர்வதேச / தேசிய போட்டிகளில் முதலிடம் / இரண்டாமிடம் / மூன்றாம் இடங்களில் வெற்றிபெற்று இருத்தல் வேண்டும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் விண்ணப்பம் துவங்கும் நாள். 24.06.2025 விண்ணப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 31.07.2025 மாலை 5 மணியாகும். ஒன்றிய அரசினால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள், அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகள், இந்திய ஒலிம்பிக் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு சம்மேளங்களால் நடத்தப்பட்ட சர்வதேச / தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள், ஒன்றிய அரசின் விளையாட்டு அமைச்சகம் / இந்திய விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்ட சர்வதேச / தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இவை அனைத்தும் தகுதியான விளையாட்டுப்போட்டிகள் ஆகும். இதற்கான வயது வரம்பானது 2025 ம் ஆண்டுஏப்ரல் மாதம் (30.04.2025) 58 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாகவும், தமிழ்நாடு சார்பில் போட்டிகளில் பங்கேற்றவர்களாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் மாத வருமானம் ரூ.6000/ க்கு மிகாமல் இருக்க வேண்டும் (வருமானச் சான்று இணைக்கப்பட வேண்டும்). ஒன்றிய அரசின் விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம் / மாநில அரசின் ஓய்வூதியம் பெறுவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதி இல்லை.முதியோர்களுக்கான விளையாட்டுப்போட்டிகளில் (Veteran / Masters Sports meet) வெற்றி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதி இல்லை. மேலும் விபரங்களுக்கு 04652 262060 என்ற தொலைபேசி எண்ணிலோ (அ) மாவட்ட விளையாட்டு அலுவலகத்தை நேரிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

### தென்காசி மாவட்டம் திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியில்

# ரூ.3.64 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து பல்வேறு துறைகளின் மூலம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள பணிகளுக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்

தென்காசி, ஜூன்.29-

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள். தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.திருமதி. ராணிஸ்ரீகுமார் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.திரு. சதன் திருமலைக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே. கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் கடந்த நான்காண்டுகளில் பல்வேறு துறைகளின் மூலம் எண்ணற்ற திட்டங்களை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் மக்களுக்கென பல்வேறு சேவைகள் மற்றும் நலத்திட்டங்களை வழங்க அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் திருவேங்கடத்தில் ரூ.2.61 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டா ட்சியர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கரன்கோவில் வட்டம் பந்தப்புளி கிராமத்தில் AG-AMT-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், பெரியூர் கிராமத்தில் AG-AMT- 2024-25 திட்டத்தின் கீழ் ரூ.9.45 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், புன்னைவனம் கிராமத்தில் MGNREGS-2023-24 திட்டத்தின் கீழ் ரூ.9.32 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், அரியநாயகிபுரம் ஊராட்சி அருணாசலபுரம் கிராமத்தில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில்



நியாயவிலை க்கடையும், குருவிகுளம் வட்டம் வடக்கு குருவிகுளம் கிராமத்தில் MGN-REGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், வெள்ளாகுளம் கிராமத்தில் MGNREGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.9.97 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், தெற்கு குருவிகுளம் ஊராட்சி அழகனேரி கிராமத்தில் MGN-REGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.9.97 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், வெங்கடாசலபுரம் ஊராட்சியில் ஆண்டிப்பட்டி கிராமத்தில் MLACDS -2023-24 திட்டத்தின் கீழ் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும், மேலநீலிதநல்லூர் வட்டம் சின்னகோவிலான்குளம் ஊராட்சியில் MGN-REGS-2024-25 திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடமாடும் கால்நடை மருத்துவ சிகிச்சை ஊர்தி சேவையினையும், மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 30 பயனாளிகளுக்கு ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில் மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 50 சதவீதம் மானியத்திலும், வருவாய்த்துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு ரூ.7.71 இலட்சம் மதிப்பிலான வரன்முறை பட்டாக்களுக்கான ஆணையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 03 பயனாளிகளுக்கு ரூ.40,500/ மதிப்பிலான திருமண நிதி உதவித்தொகைகளும், 04 பயனாளிகளுக்கு ரூ.90,000/ மதிப்பிலான இயற்கை மரண உதவித்தொகைகளும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் மூலம் 75 பயனாளிகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது என மொத்தம் 122 பயனாளிகளுக்கு ரூ.17. 71 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் வாசுதேவநல்லூர் தேர்வு நிலை பேரூராட்சியில் அடிப்படை கட்டமைப்பு நிதி திட்டம் 2024 -2025 இன் கீழ் பூலான்குளம் செல்லும் சாலையில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு பொது மக்கள் பயனடைவார்கள் என மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், சங்கரன் கோவில் நகர்மன்ற தலைவர் திருமதி.உமாமகேஸ்வரி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்திரு. லாலா.சங்கரபாண்டியன், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி.விஜயலெட்சுமி, திருவேங்கடம் வட்டாட்சியர் திரு.செல்வக்குமார், செயற்பொறியாளர் (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) திருமதி. அனிட்டா சாந்தி, உதவி செயற்பொறியாளர் திரு.ஜான் ஆசிர், உதவி பொறியாளர் திரு.அசோக், வாசுதேவநல்லூர் பேரூராட்சிமன்ற தலைவர் திருமதி.லாவண்யா, பேருராட்சி செயல் அலுவலர் திருமதி.பதுருனிஷா, உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) திரு.திருச்செல்வம், உதவி பொறியாளர் திரு.மா.குருசாமி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு

## அமலாக்கப் பிரிவு, காவல்துறை மற்றும் கல்லூரி மாணவர்கள் இணைந்து அசத்தல்

கூடுவாஞ்சேரி, ஜூன்.29-

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அருகே உலக போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, கூடுவாஞ்சேரி அமலாக்கப் பிரிவு சார்பில் சென்னை கலைஞர் கிளாம்பாக்கம் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி அம்பலகத்துறை காவல் உதவி ஆணையாளர் சத்தியசீலன், தலைமையில் அமலாகத்துறை காவல் ஆய்வாளர் சதீஷ் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் சென்னை கிறிஸ்டின் கல்லூரி மாணவர்களும் காவல் துறையினரும் இணைந்து செயல்பட்டனர்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகளை மையப்படுத்தி மைமிங் எனப்படும் சைகை நாடகம் நடத்தப்பட்டது. மாணவர்கள் தங்களது முகபாவனைகள் மற்றும் உடல் அசைவுகள் மூலம் போதைப்பொருட்களுக்கு அடிமையாவதால் ஏற்படும் சமூக, பொருளாதார மற்றும் உடல்ரீதியான சீரழிவுகளை தத்ரூபமாக வெளிப்படுத்தினர்.

இந்த கலைநிகழ்ச்சி பொதுமக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மைமிங் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, காவல் துறையினரும் கல்லூரி மாணவர்களும் பொதுமக்களுடன் நேரடியாக கலந்துரையாடினர். போதைப் பொருள் பழக்கத்தால் தனிமனிதன், குடும்பம் மற்றும் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. போதைப் பொருட்களை தவிர் ப்பதன் அவசியம், போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கான வழிகள் மற்றும் அரசின் போதைப்பொருள் ஒழிப்பு திட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில், பேருந்து நிலையத்திற்கு வந்திருந்த ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விழிப்புணர்வு அடைந்தனர். காவல்துறையின் இந்த முயற்சிக்கும், மாணவர்களின் சமூக அக்கறைக்கும் பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்கும் நோக்கில் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சாரம், இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை நல்வழிப்படுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# விபத்தில் தந்தையை இழந்த இரண்டு குழந்தைகளுக்கு தமிழ்நாடு அரசின் விபத்து காப்பீடு நிதியுதவி திட்டம் வழங்குதல்

மானாமதுரை, ஜூன். 29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் தெ.புதுக் கோட்டை அரசு நிதியுதவி பெறும் எம்.கே.என்.நடுநிலைப் பள்ளியில் பயின்று வரும் மதிபாலன், வர்ஷினி இவர்களின் தந்தை பாலமுருகன் சாலை விபத்தில் மரணமடைந்தார்.

அவரின் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் கல்வி தடைபடாமல் இருக்க பள்ளி மூலம் விண்ணப்பம் செய்யப்பட்டது.பள்ளி தொடக்க கல்வி துறை சார்பில் விண்ணப்பம் பரிசீலனை செய்து, தற்போது இரண்டு குழந்தைகளுக்கும் தலா ரூ 75,000 க்கான நிரந்தர வைப்பு தொகைக்கான பத்திரத்தை குழந்தைகள் மற்றும் பாதுகாவலர் பஞ்சவர்ணத்திடம் மானாமதுரை வட்டார கல்வி அலுவலர் திருமதி அஸ்மிதா பானு வழங்கினார்.உடன் பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுருநாதன் உடனிருந்தார்.

இந்த நிரந்தர வைப்பு தொகை வட்டி மூலம் கல்வி பயிலவும், கல்லூரி உயர்கல்வி காலத்தில் முதலீடு பணமாக மாணவர்கள் வங்கி கணக்கில் வரவு செய்யப்படும் இந்த திட்டம் மாணவர்களுக்கு சிறந்த வரப்பிரசாதமாக விளங்குகிறது.

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களின் வருமானம் ஈட்டும் தந்தை அல்லது தாயார் விபத்தில் இறந்து விட்டால் அவர்களின் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் கல்வியை தொடர தமிழ்நாடு அரசு விபத்து காப்பீடு நிதியுதவி திட்டம் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.



■ சிவகங்கை, இளையான்குடி சாலையில், நெடுங்குளம் பகுதியில் சாலையில் படர்ந்து வளர்ந்த மரக்கிளையால் வாகனங்களுக்கு விபத்து ஏற்படும் நிலை உள்ளது என வாகன ஓட்டிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# விடியா தி.மு.க. அரசை கண்டித்து சேலையூரில் பொதுக்கூட்டம்: தாம்பரத்தில் இனியும் தி.மு.க.வுக்கு வாக்களிக்கக் கூடாது மக்கள் உறுதியோடு இருக்கின்றார்கள்

## செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் பேச்சு

தாம்பரம், ஜூன்.29-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் மாநகர சேலையூர் பகுதி கழகம் சார்பில் விடியா தி.மு.க. அரசின் நிர்வாக சீர்கேட்டை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் கிழக்கு தாம்பரம் கிளப் ரோடு, சேலையூர் மேல்நிலைப் பள்ளி எதிரில் சேலையூர் பகுதி கழகச் செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவருமான சேலையூர் ஜி.சங்கர் தலைமையில் நடைபெற்றது.





பகுதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.கூத்தன், எல்லார் செழியன், ஏ.கோபிநாதன், இரா.மோகன், மாமன்ற உறுப்பினர் மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன், ஜெ.சீனு பாபு, மதுரைப்பாக்கம் எம்.பி.மனோகரன், எஸ்.வளையாபதி, பகுதி நிர்வாகிகள், டி.அய்யனார், எஸ்.மலர்லட்சுமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

46வது தெற்கு வட்டக் கழகச் செயலாளர் டி.ஏ.பலராமன், வட்டக் கழகச் செயலாளர்கள் டி.ஆன்ரூஸ்பாபு, கே.எல். மனிதநேயமூர்த்தி, எம்.ஜெ.எல்.சுரேஷ்பாபு, என்.ரவிக்குமார், ஜி.திவாகர், வி.இராமமூர்த்தி, எ.அப்துல் மஜீத், ச.கோட்டைசாமி, ஏ.கே.வி.ஜீவன்ஜீவா, எஸ்.பொன்னுசாமி, எம்.வசந்த், ஜி.கந்தன், கே.கிருஷ்ணமூர்த்தி, வி.கோபால், டி.பாலாஜி, கே.கே.சரவணன் ஆகியோர் வரவேற்புரையாறறினர்.


48வது தெற்கு வட்டக் கழக நிர்வாகிகள் ஜி.கோவிந்தராஜுலு, பி.பார்வதி, எம்.புஷ்பா, கே.ராம்மோகன், வி.வினோத், பி.ஏழுமலை, கே.பி.சத்யன், இ.அன்பு, ஜெ.லிங்கமூர்தி, ஜி.ஜானகிராமன், பி.ஜெயசீலன், கே.வெங்கடேசன், எஸ்.அய்யனார், ஆர்.காந்தி, எம்.அருணாச்சலம், எம்.பாலசுந்தரம் ஏ.என். ராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக செயற்குழு உறுப்பினரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான ஏ.அமுதா, செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இரா சேந்திரன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா ஆகியோர் சிறப்புரையாற்றினர்

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொருளாளர் பி.கே.பரசுராமன், பொதுக்குழு உறுப்பினர் தா.மு.துரைவேல், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ். மலர்மன்னன், மாவட்ட அணி செயலாளர்கள் ஜி.எஸ்.புருஷோத்தமன், ஜி.எம்.சாந்தகுமார், கே.பி.காசிராஜ் பாண்டியன், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் புலவர் இராஜகோபால், எஸ்.மூர்த்தி, தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய்கணேஷ், வாணி சுரேஷ்பாபு, ஸ்டார் பிரபா, வாட்டர் கே.ராஜ், சுபாஷினி புருஷோத் தமன், மாவட்ட அணி நிர்வாகிகள் எஸ்.ஏ.விஜயராகவன், டி.எல்.ஆர்.சந்திரமௌலி, தாம்பரம் எஸ்.மாரி, வி.கே.லோக நாதன், ஆர்.அமுதா, ஆர்.அக்பர் அலி, பீர்முகம்மது, போர்வெல் வி.ரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, இ.எம்.டேனியேல், எம்.பாலகணேஷ், பகுதி நிர்வாகிகள் கோ.மனோகரன், இ.சுசீலா, என்.சாரதா, பி.ஜார்ஜ், எம்.கஜேந்திரமுத்து, எஸ்.லோகநாயகி, கே.எம். கார்த்திகேயன், டி.ஆர். கெஜா, பி.மோகன்ராஜ், இ.வெங்கடேசன், தேவி ஸ்ரீதரன், சைதை ப.ராஜ், வி.கோபாலகிருஷ்ணன், ஆர்.ஜெகதீசன், ஜேசுராஜ், முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் சேலையூர் பகுதி 85வது கிழக்கு வட்டக் கழகச் செயலாளர் ஆதி.ஜெகதீசன் நன்றியுரையாற்றினார்.





■ திருப்பூர் மாவட்டம் இரண்டாவது மண்டலம். இதில் சுகாதார ஆய்வாளராக ராஜ் கண்ணன் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க இவர் தனி கவனம் மேற்கொண்டு வருகிறார். இதற்கு உதாரணமாக. திருப்பூர் புதிய பேருந்து நிலையம். முன்பு இருந்த சுகாதாரத்துறை ஆய்வாளர். புதிய பஸ் நிலையம் சீரான பராமரிப்பு இல்லாமல் இருந்தது. இப்போது பணியில் இருக்கும் சுகாதாரத்துறை ஆய்வாளர் ராஜ் கண்ணன் அவர்கள் புதிய பேருந்து நிலையம் மற்றும் அவருக்குச் சேர்ந்த வார்டுகளையும் சுத்தமும் சுகாதாரம் ஆக இருக்க தனி கவனம் செலுத்தி வருகிறார். இதற்கு உதாரணமாக புதிய பேருந்து நிலையம். சுத்தமாகவும் சுகாதாரத்துடன் நல்ல பராமரிப்பு செய்து வருகிறார். புதிய பேருந்து நிலையம் வரும் மக்களும் சமூக ஆர்வலர்களும் சுத்தமும் சுகாதாரமும் இருப்பதைக் கண்டு சுகாதார ஆய்வாளர் ராஜ் கண்ணன் அவர்களை பாராட்டுகளை தெரிவித்தனர்.

# பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து ஆலோசனைக் கூட்டம்

பல்லாவரம், ஜூன்.29-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து ஆலோசனைக் கூட்டம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல தேர்தல் பணிகள் பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி, கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் களப்பணி தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள் முன்னதாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை பெறும் வட்டக் கழகச் செயலாளர்கள் பகுதி கழகச் செயலாளர்களுக்கு மோதிரம் அணிவிக்கப்படும் அறிவிப்பு கிணங்க இ.கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணா துரை, த.ஜெயக் குமார், இ.எஸ். பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி மற்றும் வட்ட கழக செயலாளர்கள் அப்பாஸ் டி.எச். பிரான்சிஸ் பால், சாலா என்கின்ற சாலமோன் ஆகியோர்களுக்கு ஆ.ராசா எம்.பி, டி.ஆர். பாலு எம்.பி, அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சால்வை அணிவித்து ஒரு சவரத்தில் தங்க மோதிரம் அணிவித்து கௌரவித்தார்கள் அப்பொழுது கழகத் தீர்மானம் செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தாம்பரம் மாநகர அவைத் தலைவர் கோ. காமராஜ், தொமுச இரா. பொன்ராம் தகவல் தொழில்நுட்பணி மாநில துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன், என்.நவீன் ஆகியோர் உடன் இருந்தனர்







# “தீவிர தூய்மை பணிகள் MASS CLEANING” மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, ஜூன்.29-

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.23 செல்லூர் குலமங்கலம் மெயின் ரோடு மற்றும் செல்லூர் 50 அடி சாலை பகுதிகளில் தீவிர தூய்மை பணிகளை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட 100 வார்டு பகுதிகளில் மாண்புமிகு மேயர் அவர்களின் உத்தரவின்படி தீவிர தூய்மை பணி (Mass Cleaning work) தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர் நிகழ்வாக மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.23, 24, 25 மற்றும் 27 செல்லூர் கண்மாய் சாலை, செல்லூர் குலமங்கலம் மெயின் ரோடு, செல்லூர் 50 அடி மற்றும 60 அடி சாலை, நாடகமேடை பகுதிகள், கல்யாண சுந்தரபுரம் 9வது தெரு, கட்டபொம்மன் நகர், அய்யனார் கோவில் மற்றும் மீனாட்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர தூய்மைப்பணிகளை மாண்புமிகு மேயர் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த தீவிர தூய்மை பணியில் மாநகராட்சி குப்பைத் தொட்டிகளில் சேரும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுமாறும், வீடுகளில் தினந்தோறும் குப்பைகளை முறையாக சேகரிக்குமாறும், போக்குவரத்து சிரமமின்றி செல்வதற்கு சாலைகளில் சேரும் மணல்களை உடனுக்குடன் அகற்றுமாறும், பாதாள சாக்கடையில் ஏற்படும் அடைப்புக்களை உடனுக்குடன் சரிசெய்யுமாறும், சேதமடைந்த சாலைகளை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் உத்தரவிட்டார்.



இன்று நடைபெற்ற தூய்மை பணியில் 185 தூய்மைப் பணியா ளர்கள், 8 தூய்மை மேற்பார்வை யாளர்கள், 1 சுகாதார ஆய்வாளர் ஆகியோர் ஈடுபட்டனர். மேலும் தூய்மைப் பணிக்காக 1 ஜே.சி.பி.இயந்திரம், 2 டிப்பர் வாகனங்கள், 1 ரோபோ, 2 டிராக்டர்கள், 5 இலகுரக வாகனங்கள் மற்றும் 1 மண்கூட்டும் இயந்திரம் ஆகிய வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், மாநகர்நல அலுவலர் மரு.இந்திரா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், சுகாதார ஆய்வாளர் திரு.சுரேஷ் குமார், உதவிப்பொறியாளர் திரு.சங்கிலிராஜன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.குமர வேல், திரு.மாணிக்கம், திரு.முரளிகணேஷ், திரு.மாயத்தேவன், மாநகராட்சி அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161